1978 மார்ச் 9]

திருடுவது எல்லாம் இருக்கிறது. மயக்க மருந்து கொடுத்து உள்ளே இருக்கிறவர்களுடைய கை கால்களைக் கட்டிப் போடக் கூடிய அளவுக்கு இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே இப்படிப்பட்ட முறைகள் நடக்காமல் இருக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : திரு. கோதண்டராமன் அவர்கள் சிலர் எப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்கிறார்கள் என்று கற்றுத் தந்தமைக்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி அளிக்கிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இரவிலேயும் பகலிலேயும் சென்னையிலே அண்ணா நகர் போன்ற பகுதிகளிலே கொள்ளை அடிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு போதுமான ஜவான்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. உதாரணத்திற்கு, நான் கேள்வி நேரம் என்றாலும் சொல்லிக்கொள்கிறேன், அண்ணா நகரின் விஸ்தீரணம் ஏறக்குறைய 3, 4 மைல் இருக்கும், இவ்வளவு பரந்த இடத்திலே திருட்டுப் போய்விட்டால் ஜவான்கள் ஒருவர் அல்லது இருவர்தான் இருப்பதால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள், ஆகவே அந்தக்குறையைப் போக்குவதற்கு அதிகமான ஜவான்களைப் போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : நிச்சயம் இதுபற்றி ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி : தலைவர் அவர்களே, 1976—77 ஆம் ஆண்டிலே நடைபெற்ற வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள் முந்தைய ஆண்டைவிட அதிகமா, குறைவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : முன்னைவிட இந்தக் குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சாத்தனூர் மேல்மட்டக் கால்வாய்.

*461. வினு—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

சாத்தனூர் அணையின் இடதுபுற மேல்மட்டக் கால்வாய் வேலை என்ன நிலைமையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்திட்டம் தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும், எத்தனை கிராமங்களுக்கு இதன் மூலம் பயன் கிடைக்கும் ? எவ்வளவு நிலங்கள் பயன் பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்படி 5 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் சாத்தனூர் அணையின் மேல் மட்டத்திலிருந்து கிளம்பி புதிதாகத் தோண்டவிருக்கும் 3 ஏரிகளின் மூலம் சுமார் 3,182 ஏக்கருக்கு பாசன உறுதி வசதியும், 2,610 ஏக்கருக்கு இரு போகமும் பயிர் செய்ய முழு மறுவசதியும், 1,531 ஏக்கர் புது புன்செய் நிலத்திற்கு முழுப் பாசன வசதியும் அளிக்கும். சுமார் 445 லட்ச ரூபாய் செலவில் இத்திட்டம் அமல்படுத்தப்படும். ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். ஆய்வு முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர் குடியிருப்புகள்.

*462. வினா—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கீழ் மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர்களுடைய குடியிருப்புகள் கட்டி 20 வருடங்களுக்கு மேல் ஆகியும் பராமரிப்பு செய்யாததால் கட்டடம் ஆபத்தான நிலையில் இருப்பதாக அரசுக்கு புகார்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 25—7—77 அன்று பொதுப்பணித் துறை ஊழியர்கள் சங்கத்தினரிடமிருந்து ஒரு கோரிக்கை நிர்வாகப் பொறியாளருக்கு வந்தது.

(ஆ) சில கட்டிடங்கள் 1969-ம் ஆண்டு மராமத்து செய்யப்பட்டன. மற்றக் கட்டிடங்களும் தேவைக்கேற்றபடியும், நிதி வசதியைப்பொருத்தும் அவ்வப்போது மராமத்து செய்யப்படுகின்றன.